திராவிடன்

ஆசிரியர்: என்.வி.என்.

மாலை 17 : 24-8-63 சனிக்கிழமை : விலை 16 காசு. : மலர் 2

அறிஞர் அண்ணாவும் கருஞ்சட்டையும்!

என். வி. என்.

காங்கிரஸ் கட்சியினருக்கு கதர்ச் சட்டை அடையாளமாயிருப்பதுபோல், கம்யூனிஸ்டுகளுக்கு செஞ்சட்டையிருப்பதுபோல், திராவிட கழகத் தோழர்கள் அனைவரும் கருப்புச்சட்டை அணியவேண்டும் என்பது பெரியார் அவர்களின் உத்திரவு. ஆனால் இந்த முடிவு திராவிட கழக நிர்வாகக் கூட்டத்திலேயோ அல்லது செயற் குழுக் கூட்டத்திலேயோ கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவல்ல. எனினும் வழக்கம்போன்று பெரியார் அவர்கள் கட்டளையென்ற அடிப்படையில் திராவிட கழகத் தோழர்கள் கருப்புச் சட்டை அணிவதைப் பழக்கமாகக் கொண்டனர்.

பெரியாரின் இந்த உத்திரவைச் சிலர் சில சந்தர்ப்பங்களில் நிறைவேற்ற இயலவில்லை. நிறைவேற்றவில்லையென்றால் அலட்சிய மனோபாவத்தால் அல்ல; கருப்புச்சட்டை இல்லாத காரணம்தான். என்றாலும் பெரியார் அவர்களுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. வழக்கம்போல இதற்கும் அண்ணாதான் காரணமாயிருக்கும் என்ற எண்ணத்தை உருவாக்கிக்கொண்டு அதை வளர்த்துக்கொள்ளவும் முனைந்தார்.

இந்நிலையில் மதுரையில் கருப்புச் சட்டை மாநாடு நடைபெற்றது. கருப்புச்சட்டைகளணிந்த தோழர்கள் ஆயிரக்கணக்கில் மாநாட்டில் திரண்டனர்.

இந்த மாநாட்டைத் தடை செய்ய அன்று போலீஸ் இலாகா அமைச்சரான டாக்டர் சுப்பராயன் அவர்களின் மூலமாக காங்கிரசார் தீவிர முயற்சி செய்தனர்.

அன்று முதலமைச்சர் ஓமந்தூரார் அவர்கள். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராசர்! காங்கிரசாரின் எண்ணம் ஈடேறவில்லை. எனவே மாநாட்டையே நடத்தவிடாதபடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதென திட்டமிட்டனர்.

அவர்களின் இச்செய்கைக்குத் துணைசெய்யும்வகையில், மாநாட்டுக்கு வந்திருந்த (கருப்புச் சட்டை அணிந்த) தோழர்களில் சிலர் மதுரைக் கோயிலைப் பார்க்கச் சென்றனர். ஆனால் தவறான எந்தச் செயலிலும் அவர்கள் ஈடுபட்டார்களில்லை. என்றாலும் மாநாட்டைக் கலைக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தவர்களுக்கு இது ஒரு கருவியாக உதவிற்று.

கருப்புச் சட்டைக் காரர்கள் கோயிலில் புகுந்து அக்கிரமம் செய்கிறார்கள்—கடவுள்மீது நம்பிக்கையற்ற இந்தக் கட்சியினர் இந்து தர்மத்தின் புனிதத்தன்மையைக் கெடுக்கின்றனர் என்று கூறி அடிதடி சண்டை மூட்டிவிடட்பட்டது. அந்தச் சண்டை இறுதியாக கருப்புச் சட்டை மாநாட்டுக் கொட்டகைக்கே தீ வைத்து அநீதி புரியும் அளவுக்குச் சென்றது.

மாநாட்டில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கொடுமைகளுக்கு ஆளாயினர். வைதீகத்தைக் காப்பாற்றுவது என்ற பேரால் பலாத்காரம் தாராளமாகக் கையாளப்பட்டது.

மாநாடு குழப்பத்தில் கலவரத்தில்—பெருஞ் சேதாரத்தில் முடிந்தது. மதுரை நகரே அல்லோகலப்பட்டது என்று கூறின் மிகையாகாது.

இந்த மாநாட்டுக்குப் பிறகு கருப்புச்சட்டை அணிந்த தொண்டர் படை ஒன்று அவசியமா என்ற பிரச்சினை எழுந்தது. ஆனால் பெரியார் அவர்கள் கருப்புச் சட்டை அணியாத யாராயிருந்தாலும் அவர்களை கழக மேடை மீது அனுமதிக்கக் கூடாது, எல்லோரும் கருப்புச் சட்டை அணியவேண்டும் என்று இன்னும் கண்டிப்பாகச் சொல்லி வந்தார்.

இது அண்ணா அவர்களுக்குச் சரியென்று படவில்லை. எனவே அவர் கருப்புச் சட்டை அணியாமலே கழக நடவடிக்கைகளில் கலந்துகொண்டு வந்தார். இதனால் அண்ணா மீது பெரியாருக்கு மிகுந்த ஆத்திரமும், கோபமும் ஏற்பட்டது. ஆகவே தமது உத்திரவைக் கடுமையாக்கினார். கருப்புச் சட்டை அணியாதவர்களை கூட்டத்துக்குப் பேச எந்தக் கிளையாவது அழைத்தால் அந்தக் கிளைக் கழகத்தையே கலைத்துவிடுவேன் என்று பெரியார் அறிக்கை வெளியிட்டார்.

இதனால் கட்சியில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. குறிப்பாக பெரியார்—அண்ணா ஆகியோருக்குமிடையே மேலும் மனக்கசப்பு வளரலாயிற்று. இந்த விரும்பத்தகாத நிலை என் போன்றவர்களுக்கு மிகவும் வேதனையை உண்டாக்கிற்று.

பெரியார் அவர்களும் அறிஞர் அண்ணா அவர்களும் எப்படியாவது ஒன்றுபட்டாக வேண்டும் என்ற பேரவா கொண்ட என்னைப் போன்ற தோழர்கள் இதுகுறித்து அண்ணா அவர்களிடம் விவாதிப்பதுண்டு.

அப்போதெல்லாம் நான் கருப்புச் சட்டை மட்டுமல்ல, அத்துடன் மேல் துண்டாகவும் கருப்புத் துண்டுதான் அணிவேன். அண்ணா அவர்களிடம் இதைப்பற்றி விவாதிக்கும்போது ஏன் வேட்டியைக் கூட கருப்பு வேட்டியாகவே அணிவதுதானே என்று என்னைக் கேலி செய்வார்.

கருப்புச் சட்டை ஏன் அணியவில்லையென்று கேட்டாலோ அண்ணாவிடம் இது போன்ற பதில்! அதே சமயத்தில் பெரியார் அவர்களோ கருப்புச் சட்டை அணியாத கழகத் தோழர் யாராயிருந்தாலும் அவர்கள் தமக்கு எதிரிகள் என்று மேடையிலே பேசும் நிலை! அதற்கேற்றதைப் போல பெரியாரிடம் தங்களுக்குத்தான் தீவிர அக்கறை உண்டு என்று காட்டிக் கொள்பவர்களும் அண்ணா அவர்களைப் பிடிக்காதவர்களுமான சில தோழர்கள், ''அண்ணாதுரையை நம்பாதீர்கள் அய்யா, கருஞ்சட்டை அணிந்தால் தொந்திரவு வரும், சர்க்காரின் தடை, தண்டனை வரும், அதற்காக அஞ்சுகிறார்'' என்று கூறி பெரியாரின் எரிச்சலைத் தூண்டிவிடும் கைங்கர்யத்தை செய்து வந்தனர்.

அந்தத் தோழர்களைப் பெரியார் அவர்களின் எதிரிலேயே நான் கண்டிப்பேன். இவ்வாறு பெரியாருக்கும் அண்ணாவுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தில்

ஆச்சார்யா கிருபளானியின் ஆணித்தரமான பேச்சு!

பாராளுமன்றத்தில் ஆச்சார்யா கிருபளானி அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது தெரிவித்துள்ள கருத்துக்களில் இரண்டொன்று நமக்கு மாறுபட்டதாயினும், பொதுவாக அவர் எடுத்துக்காட்டிய குறைகள், குற்றச்சாட்டுகளை ஆளுங் கட்சியினரும் ஆர தீர யோசித்துத் தெளிவு பெறவேண்டியதாகும். [ஆ-ர்]

——(0)——

இந்த 17 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் மீது லோக சபையில் முதல் தடவையாக விவாதத்துக்கு வந்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நேருவும், பிற மந்திரிகளும் இன்றைய விவாதத்தின் போது, வெகு நேரம் சபையிலிருந்து சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். விவாதத்தின்போது வார்த்தை தடிப்புகள் காணப்படவில்லை.

ஆச்சார்யா கிருபளானி சுமார் ஒரு மணி நேரம் பேசினார்! பார்லிமெண்ட் சபையும், பார்வையாளர்களின் காலரிகளும் நிறைந்திருந்தன. அவர்கள் பேச்சின் விவரம்:

இப்போதுள்ள சர்க்கார் போய் விட்டால் அடுத்தபடியாக யார் மந்திரி சபை அமைப்பார்கள் என்று பல காங்கிரஸ்காரர்கள் என்னிடம் கேட்கிறார்கள். இப்போதுள்ள சர்க்கார் போய் விட்டால் நாட்டில் பொதுத் தேர்தல்கள் நடக்கும். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் சர்க்காரை அமைப்பார்கள்.

எந்த ஒரு தனிக் கட்சிக்கும் போதிய மெஜாரிடி இல்லை யென்றால் ஒன்றுக்கு மேற்சட்ட கட்சிகள் சேர்ந்து கூட்டு சர்க்கார் அமைக்கும்.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் மட்டும்தான் இரண்டு பெரிய கட்சிகள் என்ற வழக்கம் இருந்து வருகிறது. மற்றெல்லா ஜனநாயக நாடுகளிலும் கூட்டு சர்க்கார் அமைப்பது சாதாரண வழக்கமேயாகும். உலகம் பூராவிலும் இத்தகைய கூட்டு சர்க்கார் அமைத்து நல்லபடியாகவே நிர்வாகம் நடத்தி வருகின்றன.

ஆகையால், இந்தியாவில் மத்திய மந்திரி சபையை அமைப்பதற்கு ஒரு தனிப்பட்ட கட்சி பெரும் மெஜாரிடி பெற்றாக வேண்டும் என்ற அவசியம் ஒன்றுமில்லை. தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் மெஜாரிடி கிடைக்கா விட்டாலும் பரவாயில்லை. இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைப் பிரேரிப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்திருப்பதைப் போல், சர்க்காரை அமைப்பதற்கும் சேர முடியும்'' என்று கிருபளானி கூறியபோது எதிர்க்கட்சி மெம்பர்கள் (கம்யூனிஸ்டுகள் தவிர) ஆரவாரம் செய்தனர்.

''இந்தப் பிரேரணையை ஆதரிக்கும் 73 மெம்பர்களின் சார்பாகத்தான் நான் பேசுகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். என் பக்கம் உள்ள வோட்டு பலம் காங்கிரசில் வோட்டு பலத்தைவிட அதிகமானது.

சென்ற பொதுத் தேர்தல்களில் பதிவான மொத்த வோட்டுகளில் 45.27 சதவிகித வோட்டுகளே காங்கிரசுக்குக் கிடைத்தன. எல்லா எதிர்க்கட்சிகளுக்குமாகச் சேர்ந்து 54.76 சதவிகித வோட்டுக்கள் கிடைத்தன. ஒரு விஷயத்தில் கம்யூனிஸ்டுகளும் எங்களுடன் இருக்கிறார்கள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! இந்த சர்க்காரிடம் அவர்களுக்கும் நம்பிக்கை இல்லை'' என்று கிருபளானி கூறினார்.

இந்திரஜித்குப்தா(கம்யூ): உங்களிடமும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

கிருபளானி: என்னிடம் நம்பிக்கை இருந்தாலென்ன? இல்லா விட்டாலென்ன? இந்த நாட்டை நானா ஆளுகிறேன்.

கம்யூனிஸ்டுகளும் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் தாக்கல் செய்திருப்பதால் அவர்களுக்கும் இப்போதுள்ள சர்க்காரிடம் நம்பிக்கை யில்லை யென்பது தெளிவாகிறதென்று கிருபளானி கூறினார்.

ஒற்றை மாற்று வோட்டு முறை மூலம் தேர்தல் நடந்திருந்தால் காங்கிரசைவிட அதிகமான எதிர்க்கட்சி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார் களென்றும் அவர் கூறினார். இப்போதுள்ள வோட்டு முறை காரணமாக மைனாரிடி வோட்டுக்களைப் பெற்ற சர்க்கார் சபையில் மெஜாரிடி கட்சியாக இருக்கிறதென்றார்.

30 ஆண்டு கால நண்பர்களால் நடத்தப்படும் ஒரு சர்க்கார் மீது இம்மாதிரி ஒரு பிரேரணையைக் கொண்டுவர நேர்ந்தது தனக்கு ஆழ்ந்த வேதனையை அளிக்கிறதென்று கிருபளானி கூறினார். ஆயினும், மனசாட்சி கடமை ஆகியவைகள் தான் முக்கியமே யொழிய உணர்ச்சிகளுக்கு இடமளிக்க முடியாதென்றார்.

''கோஷ்டி சேராமை என்பது ஏதோ ஒரு தார்மீகக் கொள்கை என்றும், அதிலிருந்து மாறுவது ஒரு பாபமாகுமென்றும் நினைப்பது பெரிய தவறாகும். கம்யூனிஸ்ட் சீனா சம்பந்தப்பட்ட வரையில் இந்தியா கூட்டு சேராமையயோ, நடுநிலைமையையோ பின்பற்ற முடியுமா என்று கிருபளானி கேட்டார்,

ஆக்கரீதியான சில யோசனைகளைத் தெரிவிப்பதாக குறிப்பிட்டு விட்டு, ஆசாரிய கிருபளானி மேலும் கூறியதாவது:

தேசத்துக்கு ஒரு நல்ல நிர்வாகத்தை யளிப்பது முதன்மையான விஷயமாகும். இந்த நோக்கம் பூர்த்தியாக வேண்டுமெனில் அரசியல், நிர்வாகத் துறைகள் இரண்டிலும் உள்ளவர்கள் நேர்மை, நாணயம், திறமை, கடின உழைப்பு, மதி கூர்மை, ஆகியவற்றுடன் விளங்க வேண்டும். இவ்விரு துறைகளிலுமுள்ளவர்கள் தங்களை மக்களின் சேவகர்களாக நினைக்கவேண்டும் என்றார்.

மூன்று திட்டங்கள் வந்துங்கூட மக்களின் நிலைமை தொடர்ந்து மோசமா யிருந்து வருகிறது. ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும், பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாகவும் ஆகி வருகிறார்கள் என்று முன்னாள் காங்கிரஸ் தலைவர் தேபரும் பிரதம மந்திரியுமே சொல்லி யிருக்கிறார்கள். எனவே நம்முடைய திட்டங்களில் கடுமையான தவறுகள் இருந்தாக வேண்டும். திட்டங்களை வகுத்த விதத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் இன்னும் அதிகக் குறைபாடுகள் இருக்கின்றன என்றார் கிருபளானி.

திட்டங்களைப்பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில், நிர்வாக சாத்தியக் கூறுகளை கவனிக்காமலேயே திட்டங்கள் வகுக்கப்படுவதாகச் சொன்னார். மங்களூர் துறைமுகம் திட்டம் போன்ற சிலவற்றிற்கு ஆரம்பச் செலவுகளை செய்து விட்டு, கைவிட வேண்டி வந்தது பற்றி அவர் குறிப்பிட்டார்.

விவசாயத் துறையில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகவும், அணைகளுக்காக நிறையப் பணம் செலவிட்டுங்கூட, உணவு உற்பத்தித் துறையில் சாதனைகள் சொற்பமாயிருப்பதாகவும் கூறினார்.

நிர்வாகத்தின் கீழ்மட்டங்களில் ஊழல் இருப்பதாக, சிறிது காலத்துக்கு முன்னர் ஒப்புக்கொள்ளப் பட்டது என்று குறிப்பிட்டுவிட்டு, கிருபளானி பின்வருமாறு தெரிவித்தார்:-

உயர் மட்டங்களில் ஊழல் இல்லைஎன்று சொல்வதற்குஇன்று நெஞ்சழுத்தம் வேண்டியிருக்கிறது. அரசியல் துறையில் ஊழல் நிலவுகிறது. ஐயப்பாட்டிற்குரிய வட்டாரங்களிலிருந்து ஐயப்பாட்டுக்குரியகாரியங்களுக்காக பணம் வாங்குவதாக மந்திரிகளும், முன்னாள்மந்திரிகளும் ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொள்வதைக் காண்கிறோம்'' என்றார்.

சீனா விஷயத்தில் ஆரம்பக்கட்டங்களில், சர்க்கார் பின்பற்றி வந்த கொள்கைகளை அவர் கண்டித்தார். திபேத்தை வசப்படுத்திக் கொண்டபோது உறுதியான நிலையை மேற்கொள்ளாததற்காகவும், அதனுடன் பஞ்சசீல உடன்

(7-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

செருமுகத்து பரணி பாடு!

——(0)——

1. இன்னமுத தமிழ்காக்கும் திறன்ப டைத்த
எழில்மறவா! உயிரீயும் பரம்ப ரையே!
பன்னெடுங்கால் வாழ்ந்துவரும் தமிழைச் சாய்க்க
பதவிநாடி வருவதுவோ இந்திப் பேயும்?
உன்னகத்தில் புகுந்திடுங்கால் ஊமை யாகி
உரைவிடமும் ;நல்குவதோ வீர மாகும்?
தென்னகத்தின் குலவிளக்கே! புலியின் போத்தே!
செருமுகத்து போய்நின்று பரணி பாடு.

2. அமிழ்தமொழி தமிழாகும் ஆய்ந்த றிந்தால்
அரசோச்சும் தகுநிலையும் படைத்த தாகும்
இமையினுமே மேலாகும் மொழியைக் காத்தல்
இறைவனையும் வழிப்படுதல் போன்ற தாகும்
இமிழ்கடலின் துரும்பனைய வாழ்வில் நாமும்
எழில்மொழியை கைவிட்டால் இன்னல் மிக்கும்.
குமிழனைய உயிர்வாழ்வில் மொழியைக் காக்கக்
கொடுத்துவைக்கும் மானிடரே பெரும்பே றுற்றோர்.

3. தென்னகத்தில் மொழிகாக்கும் போரே இன்பம்
திளைத்திருக்கும் நம்மினத்தின் தியாகப் பேறு!
பொன்னெழுத்தில் பொறிக்கும்நற் பொழுது இன்று
புயங்களெலாம் குருதிமிக்கால் துடித்தெ ழட்டும்!
அன்னையீந்த இன்னுடலம் அருங்க ளத்தில்
ஆவிவிடில் பெரும்பேறே! யார்க்கு வாய்க்கும்?
தென்னகத்து மறவ!நீ சினந்தெ ழுந்தால்
தொல்லையறும்! இந்திமொழி தூள்தூ ளாகும்!

4. தங்கமொத்த தமிழ்மொழியைக் காக்க தோள்கள்
தட்டிடுங்கள்! சாவெமக்குச் சொந்தம்! இன்று
பங்கெடுத்து அருங்களத்தில் மடிந்தோ மானல்
பைந்தமிழர் வரலாற்றில் பேர டைவோம்
எங்களுக்குக் கிடைத்துவிட்ட பெரும்பே றென்றே
எழுந்திடுங்கள்! மொழிகாக்கத் துடித் தெழுந்தால்
பொங்குகடல் ஆற்றலெலாம் தமிழர் கூட்டின்
பெரும்வலியை எண்ணுங்கால் நாணிச் செல்லும்!

துறையூர். மு வரதராசன்

இருக்கிறது என்பதை முன்னேற்றத்தின் இதழ்கள் மூலம் படித்துப் பார்!

'மகனே' இந்திதான் பொது மொழியென்றும் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அதைப் புரிந்துகொண்டால்தான் நாம் வாழ முடியுமென்றும் ஆணவத்தோடு அட்டகாசம் புரிகிறது — அடக்கு முறைகளை கையாளும் அரசாங்க காட்டுத் தர்பார்! அதை உடைத்தெறிந்து உன் தாய்மொழியின் மானங்காக்க புறப்படு! தாய்மொழிக்கா இந்த நிலை! இதை மனதில் பதிய வைத்து, தென்னகத் தலைவர் தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா தரும் நாள் குறிப்பை எதிர்நோக்கு! அதுதான் நீ பெற்ற தாய்க்கு பெருமை தேடும் மார்க்கம்!. உன் வருங்கால சந்ததிகள் பெருமையுடன் வாழ நீ பாடுபடு! புறப்படு மகனே, புறப்படு! நீ திராவிடத்தின் வழிகாட்டியாக இருப்பாய்!

தந்தையின் பேச்சு, அவனைத் தட்டி எழுப்பியது! அவர் கரங்களை தன் கண்களில் வைத்து ஒத்திக்கொண்டான்! அவன் தாய்மொழி பாசம்! அந்த நடு சாமத்திலும் 'திராவிடன்' வார ஏடு ஒன்றை புரட்டிப் பார்க்கச் செய்துவிட்டது! அதன் தலையங்கம்! அதில் தொடர்ந்துவரும் கழகக் காளையரின் முழக்கம்! அறிஞரின் சிறப்புமிகும் சொற்பொழிவு! தொடர்ந்து படித்தான்! அவன் மனம் இந்தி எதிர்ப்பு போராட்ட நாள் குறிப்பை இப்போது ஆவலுடன் எதிர்பார்க்க தொடங்கியது! தந்தை தந்த உத்தரவு 'புறப்படு மகனே' இந்த வார்த்தைக்கு பெருமை தேட அவன் குருதி கொட்டவும் தயங்காமல் வீரர் வழி பட்டியலில் மறு நாள் தொடர்பு கொள்ள தொடங்கினான்! அவன் செய்கையால் பெருமையடைந்து கொண்டிருந்தவர்கள் யார் தெரியுமா?

அவன் அருமை தந்தை மட்டுமல்ல, அந்த ஊர் மக்களும் பெருமிதம் கொண்டனர்.

○

2-ம் பக்கத் தொடர்ச்சி

படிக்கை செய்துகொண்டதற்காகவும் அவர் சர்க்காரைக் கண்டித்தார்.

'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வுடன் செய்துகொண்ட உடன்படிக்கை பற்றிக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:-

அதன் விளைவுகளைத் தெரிந்து கொள்ளாமல், இந்த உடன்படிக்கையை செய்துகொண்ட விதமும், இந்த விவகாரத்தை மீண்டும் கிளப்பிய விதமும், ஒரு பெரிய நாட்டின் சர்க்கார் எவ்வளவு விசித்திரமாக நடத்திச் செல்லப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

லடாக்கைவிட நேபாவில் ராணுவ நிலைமை பலம்வாய்ந்ததாக உள்ளது என்ற எண்ணத்தை சர்க்கார் ஏற்படுத்தியது. ஆனால் அதற்கு மாருக அங்கு தோல்விகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பாளரை விரட்டுவது என்ற முடிவு எந்த அடிப்படைகளை கொண்டு செய்யப்பட்டது? டில்லியில் மேற்கொள்ளப்பட்ட "அரசியல் முடிவு" அது என்று சொல்லப்பட்டது. அப்படியானால், தூக்கிவாரிப் போடக் கூடிய விஷயமே அது. ராணுவத் தலைமை காரியாலயத்துடன் ஆலோசனை கேட்காமல் போர்க்களங்கள் பற்றிய ராணுவ முடிவுகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும்? ராணுவத் தோல்விகள் பற்றி பரிசீலித்த கமிட்டியின் அறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

துரோகம் நடந்திருக்கிறது என மக்கள் நினைப்பதற்குரிய முகாந்திரங்கள் இருக்கின்றன" என்ருர்.

அவசர நிலைப் பிரகடனம் செய்ததையும் அவர் குறை கூறினர்.

சீன சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நாம் இனியும் காத்திருக்கலாகாது என்ருர். வெகுகாலம் காத்துப் பார்த்தாய்விட்டது. 'அவர்களைப்பற்றிக் கவலைப்படாமல், நாம் செய்ய விரும்புவதை செய்வோமாக" என்ருர். இது சம்பந்தமாக நாம் செய்யவேண்டிய முதல் வேலை, சீனர்கள் காலி செய்துவிட்டுப் போன நம்முடைய நாட்டை மீண்டும் வசப்படுத்திக் கொள்வதுதான் என்ருர்.

சீனவுக்கு ஆட்சேபக் குறிப்புகள் அனுப்புவதில் பலன் இல்லை. அவ்வாறு செய்வதை நிறுத்துவோமாக. அவர்கள் அவற்றை குப்பைக்கூடையில் போடுகிருர்கள். சீன மேற்கொண்டு ஆக்கிரமிப்பு செய்தால், அதைக் கவனித்து, மக்களுக்கும் வெளி உலகுக்கும் அதுபற்றித் தெரியப்படுத்தவேண்டும் என்ருர்.

சீனவுடன் ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஆச்சாரிய கிருபளானி வற்புறுத்தினர்.

இந்திய மண்ணிலிருந்து எதிரியை விரட்டும் பொருட்டு, நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், நியாயமான நிபந்தனைகளின் பேரில் எந்த நாட்டிலிருந்து இராணுவ நிதி உதவிகள் வந்தாலும் அவற்றையெல்லாம் நாம் ஏற்க வேண்டுமென்றும் அவர் சொன்னர்.

இதெல்லாம் இப்போதைய சர்க்காருக்கு சொல்லப்படும் யோசனைகளா என்று சபாநாயகர் குறுக்கிட்டுக் கேட்டார்.

"எல்லா விஷயங்களிலும் தோல்வி கண்டுள்ள இந்த சர்க்கார் பற்றி எனக்கு நம்பிக்கையில்லை. ஆனல் மக்களிடம் நம்பிக்கையுண்டு" என்று அவர் பதிலளித்தார்.

ஆச்சாரிய கிருப்ளானி தமது சொற்பொழிவின் இறுதியில், தமது பையிலிருந்து ஒரு கத்தை தந்திகளை வெளியில் எடுத்து மேஜை மேல் குவித்து வைத்துவிட்டு, "சர்க்காரை நான் மட்டும் குறைகூறவில்லை; இந்த சர்க்கார் கொடுமை புரிவதாக இந்த தந்திகள் கூறுகின்றன" என்ருர்.

அடுத்தபடியாக கம்யூனிஸ்ட் தலைவர் திரு. இரேன்முகர்ஜி பேசுகையில், திரு. கிருபளானியின் பிரேரணையைத் தங்களுடைய கட்சி ஆதரிக்கவில்லையென்ருலுங்கூட, இப்போதுள்ள மந்திரிசபை போக வேண்டுமென்றும், முக்கியமாக நிதிமந்திரி, உணவிலாகா மந்திரி போன்ற பிற்போக்காளர்களை வெளிவேற்றிவிட்டு சர்க்காரை மாற்றி அமைக்கவேண்டுமென்ருர். 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' ஒப்பந்தம், கூட்டு விமான ஒத்திகை ஏற்பாடு இரண்டையும் அவர் பலமாகக் கண்டித்தார்.

கவுரவத்துடன் கூடிய சமாதானத்துக்காக சர்க்கார் பாடுபட்டு வருவது; சீன நிராகரித்துங்கூட கொழும்புப் பிரேரணைகளை ஏற்றது ஆகியவற்றின் விளைவாக சீன ஒதுக்கப்பட்ட நிலைமையில் இருப்பதாக இரேன் முகர்ஜி சொன்னர். ஆனல், நமது ராணுவக் கொள்கைகளில்எத்தனையோ விஷயங்கள் மூடு மந்திரமாகவும் மாட்டி வைக்கக் கூடியதாகவும் உள்ளன என்ருர். அவற்றை அறிய பார்லிமெண்டுக்கு உரிமை உண்டு என்ருர். ராணுவ விவகாரங்கள் குறித்தவரை, பார்லிமெண்டிடம் நம்பிக்கை வைத்து இன்னும் அதிகமாக விஷயங்களை வெளியிடலாம் என்ருர்.

இரேன்முகர்ஜி நிதி மந்திரியையும், உணவு விவசாய மந்திரியையும் கடுமையாகக் கண்டித்தார்.

மொரார்ஜி தேசாயை தனிப்பட்ட முறையில் தமக்கு பிடித்திருந்த போதிலும், அவர் சோசலிசபாணி சமுதாய அமைப்புக்காக பாடுபடுபவர்களைச் சேர்ந்தவர்கள் அல்ல என்ருர்.

உணவு தானிய வர்த்தகம் சர்க்கார் துறையிலிருக்க வேண்டும் என்ற லட்சியத்தைக் குலைத்தவர் திரு. பட்டீல் என்றும் இரேன் முகர்ஜி குற்றஞ் சாட்டினர். அவர் எவ்வளவோ நம்பிக்கையுடனிருந்த போதிலும், செயலின்மையின் சின்னமாக விளங்கி வருகிருர் என்ருர்.

தேவர் பிலிம்ஸ்

நீதிக்குப்பின் பாசம்

——(0)——

"நீதி முதலில் — பிறகுதான் பாசம்" என்ற திட்டவட்டமான கொள்கையுடையவர் போலீஸ் அதிகாரி சந்திரசேகரன். அவரது மனைவி ஒரு லேடி டாக்டர். பிள்ளைகள் இருவரும் வழக்கறிஞர்கள். மூத்தவன் ராமு சர்க்கார் வக்கீல். இளையவன் கோபால் தனியாகத் தொழில் நடத்துகிறான்.

வீட்டிலேயே ஒரு முறைப் பெண் தன்னை மணந்துகொள்ள இருந்தும், கோபால் அவளை விரும்பாது, கிராமத்துக் குயில் கௌரியைக் காதலிக்கிறான். அவளுடைய மாமன் முத்தையன்— ஒரு முரடன், கௌரியைத் தனக்கு மணம் முடித்துத் தரும்படி அவளது தந்தையை வற்புறுத்தி வருகிறான்.

தன்னை மணந்து கொள்ளும்படி கோபாலுடன் நடத்திய போராட்டத்தில் உயிர் துறக்கிறாள் முறைப்பெண் ஜெயா, அதற்கு முன் அவளை மணந்து கொள்ள இசைந்து கௌரியின் காதலைத் துறந்துவிட்டு வந்த கோபால், கௌரியும் இறந்துவிட்டதாக எண்ணுகிறான். ஆனால் உண்மையில் கௌரி சாகவில்லை, தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றப் படுகிறாள். காதலர்கள் இருவரும் மீண்டும் ஒன்று சேருகின்றனர்.

கோபால் கௌரியை மணந்து கொள்ள, கோபாலனின் தந்தை சம்மதிக்கிறார்—தாய் மறுக்கிறாள்.

கௌரியைத் தனக்கு மணம் செய்து கொடுக்காமல். கோபாலுக்கு கொடுப்பதைக் கண்டு ஆத்திரமடைந்த கௌரியின் மாமன், கௌரியின் தந்தையைக் கொலை செய்து விடுகிறான். அவ்வழியாக வந்த கோபாலின் அன்னை கத்தியால் குத்தப் பட்டுக் கிடப்பவரின் முதுகில் இருந்து கத்தியை எடுக்கும்போது போலீஸ் அதிகாரி சந்திரசேகரன் வந்துவிடுகிறார்; தனது மனைவி என்றும் பாராமல் கைது செய்கிறார்.

குற்றவாளிக்கூண்டில் கொலைக் குற்றம் சாட்டி தனது மனைவியை ஏற்றுகிறார். மூத்த மகன் சர்க்கார் வக்கில் — தாய்க்கு தண்டனை பெற்றுத்தரும் இக்கட்டான நிலையில்! இளைய மகன் தாயை விடுவிக்க வாதாடும் வழக்கறிஞன்!

குடும்பமே நீதிமன்றத்தில் நிற்கிறது! முதலில் நீதி—பிறகு பாசம் என்ற தத்துவம் இறுதியில் நிரூபிக்கப்பட்டு நீதி வெல்கிறது!

—ஆரூர் தாஸ் அமைத்துள்ள கதை-வசனம், நல்ல கட்டுக்கோப்புடன் திகழ்கிறது. நீதிமன்றத்தில் இரு வழக்கறிஞர்களும் மோதிக் கொள்ளும் போதும், கோபாலும்—கௌரியும் சந்திக்கும் கட்டத்திலும் வசனம் சிறப்புடன் அமைந்துள்ளது.

புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு இதிலே வழக்கறிஞர் தோற்றப்பொருத்தம் மிகவும் சிறப்பு!

நாளுக்கு நாள் தனிச்சிறப்பு பெற்றுவரும் அவரது நடிப்பு 'நீதிக்குப்பின் பாசத்தில்' மேலும் பிரகாசிக்கிறது. நீதிமன்றத்தில் வாதிடும்போதும் கிராமத்துப் பெண்ணுக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொடுக்கும் போதும் முறைப் பெண்ணிடம் தன்னை 'அண்ணா' என்று அழைக்கும்படி கேட்கும் கட்டத்திலும் அவரது நடிப்பு உச்சகட்டத்தில் திகழ்கிறது.

தன் காதலி இறந்துவிட்டிருப்பாள் என்று நினைத்துக்கொண்டு எம். ஜி. ஆர். அவர்கள், "போனாளே..." என்று பாடி நடிக்கும் கட்டம் ஏ, ஒன்!

வயலில் வேலை செய்கின்ற தன்னுடைய தந்தைக்கு உணவு கொண்டுவரும் கிராமத்துப்பெண்ணாக சரோஜாதேவி நடிக்கிறார். சைக்கிள் கற்றுக்கொள்ள அவருக்கிருக்கும் அடங்காத ஆவலைக்காட்டும்போதும் — சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ளும்போதும் அவரது நடிப்பு பிரமாதம்.

ஏன் தயிர் சாதம் கொண்டு வரவில்லை என்று கேட்கும் தந்தையிடம், காதலனின் நினைவாக இருக்கும் சரோஜாதேவி, "பால் பூனையைக் குடித்துவிட்டது அப்பா" என்று கூறுகின்ற கட்டம் இருக்கிறதே அது அவருக்கே உரிய தனிபாணி! மொத்தத்தில் சரோவின் நடிப்பு நல்ல முறையிலேயே அமைந்துள்ளது.

நடிகவேள் இராதா மிகவும் அமைதியாக நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தனது பெண்ணுக்கு கல்யாணம் முடிக்க பட்டணத்து போலீஸ் அதிகாரியிடம் வந்து பேசுகின்ற காட்சி மிகவும் ரசிக்கத்தகுந்தது. தன் மைத்துனன் வைத்திருக்கும் பட்டரையைப் பார்த்து அவர் பிரமிக்கும் காட்சியும் நன்றாக உள்ளது.

ரங்காராவ்—கண்ணாம்பா மிகவும் கச்சிதமாக நடித்துள்ளனர். அசோகன், முறைப்பெண்ணாகத் தோன்றும் புதுமுகம் ராதா, ஜி. சகுந்தலா ஆகியோரும் நன்கு நடித்துள்ளனர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நம்பியாரின் உருட்டல் மிரட்டலைப் பார்க்கும் வாய்ப்பு ரசிகர்களுக்குக் கிடைத்துள்ளது — பாராட்டக்கூடிய முறையில் நடித்துள்ளார்.

வெளிப்புறக் காட்சிகள் கண்ணுக்கு விருந்து!

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் இயற்றி, கே. வி. மகாதேவன் அவர்கள் இசையமைத்து, டி. எம். சௌந்தரராசன், பி. சுசீலா ஆகியோர் பாடுகின்ற, மானல்லவோ கண்கள் தந்தது— வாங்க வாங்க கோபாலையா— சிரித்தாலும் போதுமா—போன்ற பாடல்கள் ரசிகர்களின் உள்ளத்தில் ரீங்காரமிடும்!

நீதிமன்றக் காட்சிகளில் இன்னும் சற்று வேகத்தைச் சேர்த்திருக்கலாம். வழக்கமாக தேவர் படங்களில் காடு—மேடு—அலை கடல்—ஆகிய இடங்களில் நடைபெறும் சண்டைக் காட்சிகள், 'நீதிக்குப் பின் பாசத்தில்' கொல்லனை உலைக்கூடத்தில், இயந்திரங்களின் பேரிரைச்சலுக்கு மத்தியில் நடைபெறுகிறது — புதிய முயற்சி-பாராட்டக்கூடிய காட்சி!

எம். ஏ. திருமுகம் அவர்களின் டைரக்ஷன் — "நீதிக்குப் பின் பாசத்தை" நெஞ்சில் நிலைக்கச் செய்துவிடும்!

தயாரிப்பாளர் சின்னப்பதேவர், சிறந்த சமூகச் சித்திரம் ஒன்றைத் தயாரித்த பாராட்டுக்கு உரியவராவார்!

—வீரன்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மிடையே அபிப்ராய பேதத்தை வளர்ப்பதை விட, அண்ணாவிடமே நேரில் விவாதித்து வற்புறுத்தி அவரைக் கருப்புச்சட்டை அணியச் செய்யுங்களேன்' என்று கூறுவேன். இப்படி நான் குறிப்பிடுவது தமக்குப் பிடிக்கவில்லையென்பதைப் பெரியார் தமது கோபத்தின் வாயிலாகக் காட்டுவார்! அறிஞர் அண்ணா அவர்களைப் பிடிக்காத தோழர்களில், சிலர் கருஞ்சட்டை அணியும் திட்டத்தில் நடராசனுக்கும் சரியான எண்ணம் இல்லையென்று பெரியாரைத் தனியாகச் சந்திக்கும்போது என்னைப் பற்றியும் குறை கூறும் கைங்கர்யத்தைச் செய்துவிட்டுப் போவார்கள். எனினும் பெரியார் அதை நம்பமாட்டார்.

கருப்புச்சட்டை அணியும் பிரச்சினை நாளுக்கு நாள் வளர்ந்து, கட்சியிலேயே பெரும் பிளவு உண்டாகுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. எனவே நானும், மற்ற தோழர்களும் அண்ணா அவர்களிடம் இதுகுறித்து மீண்டும் மீண்டும் வேண்டினோம், உங்கள் எண்ணந்தான் என்ன அதையாகிலும் கூறுங்கள் என்றோம்.

இறுதியாக அண்ணா அவர்கள் கருப்புச் சட்டையை கழகத் தோழர்கள் அணிய வேண்டுமென்பதற்குக் கீழ்க் கண்டவாறு தமது கருத்தை அறிவித்தார்கள்.

அதாவது:—

1: கதர்ச்சட்டையை அணிந்து கொண்டு காங்கிரஸ்காரர்கள் தவறான வழியில் நடந்தால் நாம் அவர்களைக் குறை கூறுகிறோம். அதேபோல கழகத் தோழர்கள் அனைவருமே கருப்புச் சட்டை அணியவேண்டுமென்றால் அந்தச் சட்டைக்கு நாம் எந்த மதிப்பை எதிர்பார்க்கிறோமோ அது கிடைக்குமா அல்லது கட்டுப்பாடு வளருமா?

2. கம்யூனிஸ்ட்கட்சி தோழர்கள் அனைவருமே செஞ்சட்டை அணிவதில்லை. தொண்டர்கள் மட்டும் அதுவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் மட்டுந்தான் அணிகின்றனர்.

(3) முஸ்லீம் லீகும் மற்ற கட்சிகளும் அதுபோன்றே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் தங்கள் கட்சியின் சின்னத்தை சம்பந்தப்பட்டவர்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்றிருக்கிறது.

(4) ஆதலால் கருப்புச்சட்டையைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு பதிலாக, சொற்பொழிவாளர்கள் மட்டும் அணியவேண்டும், அல்லது கழக நிர்வாகிகள் மட்டுமோ தொண்டர்கள் மட்டுமோ அணியவேண்டும் என்ற முறையை வகுத்து கட்சி உத்திரவிடட்டும். அதன்படி நான் அணியத் தயாராயிருக்கிறேன். அதற்கு பதிலாக யார் வேண்டுமானாலும் கருப்புச் சட்டை போடலாமென்றால், அந்தக் கட்டுப்பாடற்ற போக்கை வளர்க்க நான் துணையாயிருக்க மாட்டேன்:

—என்று, அண்ணா அவர்கள் கூறினார்கள். இக்கருத்தைப்பற்றி அடுத்து சென்னையில் நடைபெற்ற திராவிட கழக நிர்வாக கமிட்டியில் விவாதிக்கப்பட்டது. என்றாலும் பெரியார் அவர்கள் நான் சொன்னது சொன்னதுதான் எல்லோரும்தான் அணியவேண்டும் என்று கூறிவிட்டார். "அண்ணாதுரைக்கு பயம் ஆதலால் ஏதேதோ நிபந்தனைபோட்டு தட்டிக்கழிக்கிறார்" என்று சிலர் கூறினர். நிர்வாகக் கூட்டத்தில் இதுபற்றி காரசாரமான விவாதமும், பேச்சு தடிப்பும் உண்டாயின. அண்ணா அவர்களின் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்நிலையில்......?

[தொடர்ச்சி—அடுத்த இதழில். இது சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிக்குரிய படங்களுடன் வெளிவரும்.]

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1